**பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு**
**மாவட்ட செயலகம், மட்டக்களப்பு**

## கேள்வி அறிவித்தல்

### திராய்மடு புதிய கச்சேரிக் கட்டடத் தொகுதியின் முன்னரங்கப்பகுதியின் மீதி நிருமாணத்தை பூர்த்தி செய்தல் (1ம் கட்டம்)

(ஒப்பந்த இலக்கம்: ADM/KNBCons-1/MA-2/2022)

1. பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் சார்பில் **மட்டக்களப்பு மாவட்ட பெறுகைக்குழுத் தலைவர் அவர்களினால்** தகைமை மற்றும் தகுதியுள்ள கேள்வியாளர்களிடமிருந்து திராய்மடு புதிய கச்சேரிக் கட்டடத் தொகுதியின் முன்னரங்கப்பகுதியின் மீதி நிருமாணத்தை பூர்த்தி செய்தல் (1ம் கட்டம்) கட்டுமான வேலைக்காக கீழே விபரிக்கப்பட்டவாறு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன. இதன் மதிப்பீட்டுத் தொகையானது **113.9 மில்லியன் ரூபா** ஆகும். இதன் ஒப்பந்த காலம் **140 நாட்களாகும்**.

2. கேள்வி கோரலானது தேசிய போட்டி விலைக்கேள்வி (NCB) முறை மூலம் நடாத்தப்படும்.

3. தகைமையுள்ள கேள்வியாளர்களாவதற்கு கட்டட நிர்மாணத் துறையில் CIDA/ICTAD நிறுவனத்தில் பரிந்துரைக்கப்படும் **C4, C3** அல்லது **C2, C1** தரத்தில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டியதுடன் அப்பதிவானது கேள்வி கோரப்படும் முடிவுத்திகதியனறு வலிதானதாகவும் இருத்தல் வேண்டும் என்பதுடன் கறுப்புப் பட்டியலில் பெயர் இடப்படாததுமான கேள்வியாளர்களாக இருக்க வேண்டும்.
***மேலும் 1987ம் ஆண்டின் 3ம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்தின் பிரகாரம் பொது ஒப்பந்தங்களின் பதிவாளரிடம் தம்மை பதிவு செய்தவராக இருக்க வேண்டும். குறித்த பதிவுச் சான்றிதழின் மூலப்பிரதி (PCA 03) கேள்விப் பத்திரத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். மேற்படி இந்த PCA 03 சான்றிதழினைச் சமர்ப்பிக்காத கேள்வியாளர்களுக்கு இந்த வேலை ஒப்பந்தம் வழங்கப்பட மாட்டாது.***

4. ஆர்வமுடைய கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை மாவட்ட செயலாளர், மாவட்ட செயலகம், மட்டக்களப்பு அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் கேள்வி ஆவணங்களை மு.ப 9.00 மணி முதல் பி.ப 4.00 மணிவரை பார்வையிடலாம். இதற்கான தொலைபேசி எண்கள்: : 065-3121777, தொலைநகல்: 065-2222234

5. ஆர்வமுடைய கேள்விதாரர்களினால் ஆங்கில மொழியிலான கேள்வி ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றினை மாவட்டச் செயலாளர், மாவட்ட செயலகம், மட்டக்களப்பு எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 12.07.2022 முதல் 02.08.2022 வரை மு.ப 9.00 மணியில் இருந்து பி.ப 3.00 மணிவரை ரூபா. 30,000 (முப்பதாயிரம் ரூபாய்கள்) பெறுமதியான மீளளிக்கப்பட முடியாத தொகையை பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும்.

6. பூரணப்படுத்தப்பட்ட கேள்வி மனுக்கள் யாவும் இரட்டை பிரதிகளில் 03.08.2022ம் திகதி மு.ப 11.00 மணிக்கு அல்லது அதற்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக தலைவர், மாவட்ட பெறுகைக்குழு, மாவட்ட செயலகம், மட்டக்களப்பு எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாக அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடுதல் வேண்டும். கேள்விதாரர் ஒப்பந்த வேலையின் விபரத்தை முத்திரையிடப்பட்ட தபாலுறையின் இடது பக்க மேல்மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். விலைக் கேள்விகள் வருகைதந்த கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரீக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் கேள்வி சமர்ப்பித்தல் முடிவுறுத்தப்பட்டவுடன் உடனடியாக திறக்கப்படும்.

7. கேள்விகள் கேள்வி முடிவுத்திகதியிலிருந்து 91 நாட்களுக்கோ அல்லது நீடிக்கப்பட்ட ஒரு காலப்பகுதிக்கோ செல்லுபடியாகக் கூடியவாறு இருத்தல் வேண்டும்.

8. சகல கேள்விகளுடனும் கீழ்வரும் நிபந்தனைகளுன் கூடிய கேள்விப் பிணைமுறி இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்
   - கேள்விப் பத்திரத்தின 9ம் பிரிவில் இணைக்கப்பட்டுள்ளவாறான படிவத்தில் பெறப்பட்டிருக்க வேண்டும்.
   - மட்டக்களப்பு மாவட்டச் செயலாளரின் பெயருக்கு வரையப்பட்டிருந்தல் வேண்டும்.
   - 30.11.2022ம் திகதி வரை செல்லுபடியாகக் கூடியவாறு 1,710,000.00 ரூபாவுக்கு பெறப்பட்டிருத்தல் வேண்டும்.
   - கேள்வி ஆவணங்களில் கேள்விதாரருக்கான தரவு இல.16.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களில் ஒன்றில் பெறப்பட்டிருத்தல் வேண்டும்.

**திரு. க. கருணாகரன்**
தலைவர்,
மாவட்ட பெறுகைக்குழு,
மாவட்டச் செயலகம்
மட்டக்களப்பு
12.07.2022